செயற்பொறியாளர்,பொபது,நீஆது., பெரியாறு பிரதான கால்வாய் கோட்டம், மேலூர். அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:—பொறி.ஆ.சுப்பிரமணியன்,பி.இ.,
செயற்பொறியாளர்,பொபது,நீஆது.

**செயல்முறைக் கடித எண்:பஎ1/ /2018/ நாள்: 12.07.2018**

பொருள்: நியமனம் (நேரடி) தமிழ்நாடு அரசு பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி IV ல் அடங்கிய 2015—2016ம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் வழங்கப்பட்ட – பணிவரன் முறை – தகுதிகாண் பருவம் துவக்கி ஆணைகள் வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1 செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை கடித எண்:5428/ பி.ஸ்.டி—எச்2/2017, நாள்:26.09.2017.

2 முதன்மை தலைமைப்பொறியாளர் (கட்டடம்) தலைமைப்பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொபது, சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு.க.எண்:எஸ்3(3)/34252/2017—2/நாள்:12.10.2017.

3 செயற்பொறியாளர் பொபது,நீஆது., பெரியாறு பிரதான கால்வாய் கோட்டம் மேலூர் அவர்களின் செ.மு.க.எண்:பஎ1/ 01/ 2017/(882) நாள்:30.10.2017.

———————

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் செயல்முறை ஆணைகளின் வாயிலாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெற்ற தொகுதி IV—ல் அடங்கிய 2015—2016ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட **செல்வி.அ.ரிஜிபானு** இளநிலை உதவியாளர் (வ.எண்—161) பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 01.11.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து இக்கோட்டத்தில் பணிபுரிந்து வருகிறார். அன்னார் பணியினை தமிழ்நாடு அரசு அலுவலர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் எண்:14/2016) உள்விதி எண்.28ன் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து செல்வி.அ.ரிஜிபானு, இளநிலை உதவியாளர் என்பவரது தகுதிகாண் பருவம் 01.11.2017 முற்பகல் முதல் துவங்கப்பெற்று ஆணை வழங்கப்படுகிறது. இவரது தகுதிகாண் பருவம் மூன்றாண்டு காலம் தொடர்நது பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவம் நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் தனியர் மேற்காணும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகரில் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்தல் வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பணி நியமனம் தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்பின் நிபந்தனைக்குட்பட்டு இப்பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

24.7.4

செயற்பொறியாளர், பொப்து, நீஆஅ.,
பெரியாறு பிரதான கால்வாய் கோட்டம்,
மேலூர்.

12/7/18

பெறுநர்:

1. செல்வி.அ.ரிஜிபானு,
   இளநிலை உதவியாளர்,
   பெரியாறு பிரதான கால்வாய் கோட்டம்,
   மேலூர்.